மெட்ரோ ரயில் சேவை மீண்டும் தொடங்கியது: முகக்கவசம் அணியாவிட்டால் ரூ.200 அபராதம்

சென்னை, ஜூன் 21: தமிழக அரசு அனுமதி அளித்ததைத்தொடர்ந்து, சென்னை மெட்ரோ ரயில் சேவை திங்கள்கிழமை மீண்டும் தொடங்கியது.

சென்னையில் 42 நாள்களுக்கு பிறகு, மெட்ரோ ரயில் சேவை திங்கள்கிழமை மீண்டும் தொடங்கியது. கரோனா நோய்த்தொற்றை கட்டுப்படுத்த மெட்ரோ ரயில்களில் 50 சதவீத இருக்கைகளில் மட்டும் சமூக இடைவெளியுடன் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதிக்கப்பட்டனர். மெட்ரோ ரயில் நிலைய வளாகத்துக்குள் முகக்கவசம் அணியாத பயணிகள் அனுமதிக்கப்படவில்லை.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது:

மெட்ரோ ரயில் சேவை காலை 6.30 மணி முதல் இரவு 9 மணி வரை இயக்கப்படும். பின்பு, தேவையின் அடிப்படையில் நேர மாற்றம் செய்யப்படும். அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரயில்களில் கரோனா நோய்த்தொற்று பரவாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரயில்களில் நுழைவதற்கு அனைத்துப் பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். பயணிகள் முகக்கவசம் அணியாவிட்டாலோ அல்லது முகக்கவசத்தை சரியாக அணியவில்லை என்றாலோ உடனடி அபராதமாக ரூ.200 வசூலிக்கப்படும் என்றனர்.